# அவர்கள் இயேசுவோடு கூட இருந்திருந்தார்கள்



சகோ. பிரன்ஹாம் பேசிய செய்தியிலிருந்து

## *செய்தி:* தேவனால் அருளப்பட்ட பாதை, டிசம்பர் 1, 1953

146. பேதுருவும் யோவானும் பேதமையுள்ளவர்களாகவும் படிப்பறியாதவர்களாகவும் இருந்தார்கள். அவர்கள் முற்றிலுமாக படிப்பில்லாதவர்கள் என்று வேதாகமம் கூறுகிறது. ஆனால் அவர்கள் இவர்கள் சொல்லுவதைக் (பேதுருவும் யோவானும் சொல்லுவதைக்) கவனிக்க வேண்டியிருந்தது, அவர்கள் இயேசுவோடு கூட இருந்திருந்தார்கள். அதுதான் பிரதான காரியம் ஆகும். அது சரியே. அலங்கார வாசல் என்னப்பட்ட வாசலண்டையிலே ஒரு மனிதனைச் சுகப்படுத்த போதுமான விசுவாசம் அவர்களுக்கு இருந்தது. பேதுரு அனனியாவிடம், "நீ பொய் பேசுகிறாய்" என்று கூறும்படிக்கு அவன் தனக்குள்ளே போதுமான தேவனுடைய வல்லமையை உடையவனாயிருந்தான். அது சரியே. "நீ பணத்தை உன்னிடமே வஞ்சித்து வைத்துக்கொண்டாய்; சப்பீராளே, நீயும் அதே காரியத்தைச் செய்திருக்கிறாய்." உடனே அது அவர்களை மிக மோசமாக பயப்படுத்தினதினால், அவர்களுக்கு

மாரடைப்பு ஏற்பட்டு, மரித்துப் போனார்கள். அவர்கள் இவர்களை பொதிந்து வெளியே எடுத்துக்கொண்டு போய், அடக்கம்பண்ணினார்கள். ஆமென். அதே தேவன் இன்றும் ஜீவிக்கிறார். அதே காரியத்திட்டம் தான் இன்றைக்கான தேவனுடைய திட்டமாகவும் இருக்கிறது.

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)*

★★★★★

























